இனி இது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 03 வியாழக்கிழமை 16.04.2020 கதிர் 162

நாடாளுமன்றத்தை அதன் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி கலைத்தால், கலைக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பொதுத்தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்றும் – அப்படிச் செய்யா பக்கம் 02

## மேலும் இருவருக்கு யாழில் கொரோனா

### இங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆகியது

யாழ்ப்பாணம், ஏப்.16

பலாலிப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் மேலும் இருவருக்கு கொரோனா உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை 23 பேருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையில் சந்தேகத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட 4 பேர், பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள 3 பேர், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 7 பேர், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 2 மற்றும் முழுங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் பக்கம் 02

## அரியாலையை சேர்ந்த இருவருக்கே தொற்று

யாழ்ப்பாணம், ஏப்.16

யாழ்ப்பாணம் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டவர்களில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளவர்கள் என நேற்று அடையாளம் காணப்பட்ட இருவரும் முதியவர்களான ஆணும் பெண்ணும் என்று போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். பக்கம் 02

## கொரோனாவை ஒழித்த பின்னரே தேர்தல் அவசரப்பட்டு நாட்டைச் சீரழிக்காதீர்கள்!

### ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் கோரிக்கை

மக்களின் கண்ணீருக்கு மத்தியில் தேர்தலை நடத்தி நாட்டை சீரழிக்க எந்த சந்தர்ப்பத்திலும் நாம் தயாராக இல்லை எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற ஜனநாயகத்தை விட நாட்டு பக்கம் 02

# பொதுத்தேர்தலைத் தள்ளிப்போட அரசைக் கூட்டமைப்புக் கோரும்

### விரைவில் பகிரங்க அறிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்ரல்.16

கொரோனா வைரஸ் கொடு ரத்தின் ஆபத்து முற்றாக நீங்கும் வரை பொதுத் தேர்தலை நடத்தும் முயற்சியை முன்னெடுக்க வேண்டாம். அந்தப் பேரிடர் நீங்கிவிட்டது என்ற நிலைமை உறுதியான பின்னரே ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

– இப்படி அரசையும், ஜனாதிபதியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாகக் கோரும் எனத் தெரியவருகின்றது. பக்கம் 02

## ஈஸ்டர் குண்டுதாரியும் ரிஷாத்தின் சகோதரரும் நெருங்கிய தொடர்பில்!

### பொலிஸ் தரப்பு நேற்று அறிவிப்பு



கொழும்பு, ஏப்.16

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரிசாஜ் பதியுதீன் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குண்டுதாரிகளுடன் நேரடித் தொடர்பில் இருந்தமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. பக்கம் 02

## தனிமை மையத்துக்கு ஆள்களை ஏற்றிச் சென்ற 2 பஸ்கள் விபத்து!



### ஒருவர் பலி; 29 பேர் காயம்!

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலை தனிமைப்படுத்தல் முகாமுக்கு ஆள்களை ஏற்றிச்சென்ற இரண்டு பஸ்கள் விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் பலியானமையுடன் மேலும் 29 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று மாலை வறக்காபொல பகுதியில் இடம்பெற்றுள்ளது. பக்கம் 02

## 19 மாவட்டங்களில் ஊரடங்கு இன்று 10 மணிநேரம் தளர்வு

கொழும்பு, ஏப்.16

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் தவிர்த்து நாட்டின் ஏனைய 19 மாவட்டங்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அத்துடன், பக்கம் 02

## வடக்கில் 3 பாடசாலைகள் படையினர் வசம் ஒப்படைப்பு

இந்தியாவிலிருந்து கடற்பரப்பு ஊடாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் போதைப்பொருள்கள் கடத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கான பணியில் விசேடமாக ஈடுபடுத்தப்படும் மேலதிக படையினரைத் தங்க வைப்பதற்கு கடற்படையினரால் கோரப்பட்டதற்கு அமைய மாதகல் நுணசை வித்தியாலயம் பக்கம் 02

## கனடாவில் தமிழ்த் தம்பதி கொரோனாவால் மரணம்!



றொறன்றோ,ஏப்.16

புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து– வந்த கணவனும் மனைவியும் கொரோனாவுக்குப் பலியான பரிதாபகரமான சம்பவம் நேற்று பக்கம் 02

## முடக்கப்பட்ட பகுதிகளை நோட்டமிட படையினருக்கு ட்ரோன் கமராக்கள்!

### எதிர்காலத்தில் இராணுவத்தில் ட்ரோன் ரெஜிமெண்ட்

கொழும்பு,ஏப்.16

கொரோனா தொற்றுநோயை ஒழிப்பதற்காக முடக்கப்பட்ட பகுதிகளைக் கண்காணிக்க ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது

ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் நேற்றையதினம் பிரபல தொழிலதிபரான அனோமகா குணசிங்க ட்ரோன் கமராக்களைக் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வு நேற்று மாலை அகுரகொடவில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது, கொரோனா தொற்றுநோயை ஒழிப்பதற்காக முடக்கப்பட்ட பகுதிகளை கண்காணிக்க ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை இராணுவம் வலியுறுத்தியிருந்தது. பக்கம் 02



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விட்டால், நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியின் உத்தரவு செல்லுபடியற்றது என உத்தரவிடுமாறு உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்து கோர முடியும் என்றும் –

நேற்று இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அப்படி உயர்நீதிமன்றத்தில் எப்போது மனுச்செய்யலாம், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தான் நீதிமன்றத்தை அணுக வேண்டுமா என்ற கேள்விக்கணையுடன் நேற்றைய பத்தியை நிறுத்தியிருந்தேன்.

தற்போது வரை இருந்த நாடாளுமன்றம் மார்ச் 2ஆம் திகதி கலைக்கப்பட்டது. அதன்படி ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூட வேண்டும்.

அத்திகதியில் புதிய நாடாளுமன்றம் கூடக் கூடியதாக அதற்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டவில்லை என்றால் –

அதற்கு எப்போது நிவாரணம் கோரி, நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

ஜூன் 2ஆம் திகதி வரைக் காத்திருந்து, அத்திகதி வரை நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவில்லை, அதனால் புதிய நாடாளுமன்றம் கூடக் கூடிய சூழ்நிலை என்று கண்ட பின்னர்தான், அது குறித்து நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதுதான் இல்லை.

இன்றைய நிலையில், தேர்தலுக்கு வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. ஆனால் வேட்பாளர்களுக்கான வேட்புமனு இலக்கங்கள் இன்னும் உத்தியோக பூர்வமாக வழங்கப்படவில்லை.

அதை வழங்கி அவர்களுக்குப் பிரசாரம் செய்வதற்கு குறைந்த பட்சம் ஐந்து வார காலம் வழங்கப்பட வேண்டும் என்று சட்டம் சொல்கின்றது.

எனவே ஜூன் 2ஆம் திகதிக்கு முன் புதிய நாடாளுமன்றம் கூட வேண்டுமானால் குறைந்த பட்சம் மே 30ஆம் திகதியாவது தேர்தல் நடத்தப்பட வேண்டும். மே 30 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுவதாயின் குறைந்த பட்சம் ஏப்ரல் 25ஆம் திகதிக்கு முன்னர் வேட்பாளர்களுக்கு வாக்குச் சீட்டு இலக்கம் வழங்கப்பட்டு பிரசாரம் ஆரம்பிப்பதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அப்படி ஏதும் ஏப்ரல் 25ஆம் திகதிக்கு முன்னர் – அதாவது அடுத்த 9 அல்லது 10 நாள்களுக்குள் – நடைபெறாவிட்டால், ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு வழி இல்லை என்றாகிவிடும்.

அந்த நிலையை வசமாகப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தை முதற்கூட்டியே கலைத்த ஜனாதிபதியின் பிரகடனம் வெற்றும் வறிதுமானது என அறிவிக்கும்படி கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கச் செய்யமுடியும்.

எது, எப்படி என்றாலும் இந்த வழியில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்ற எனது தகவல் அடுத்த பத்து நாள்களில் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம். அதுவரைப் பொறுங்கள் வாசகர்களே...!

–மின்னல்–

## கொரோனாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களின் பாதுகாப்பான வாழ்விற்கு முன்னுரிமையளிக்கத் தேவையில்லையா என்றும் கேள்வியெழுப்பினார்.

சஜித் பிரேமதாஸ மேலும் கூறியிருப்பவை வருமாறு:–

தற்போது பொதுமக்கள் மத்தியிலும் அரசியல் வட்டாரங்களிலும் பிரதான பேசுபொருளாக மாறியிருப்பது நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதாகும். நாடாளுமன்ற ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துகின்ற, அதற்கு மதிப்பளிக்கின்ற மக்கள் காணப்படுகின்ற எமது நாட்டில் அனைவரும் நாடாளுமன்றத் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாடாளுமன்ற ஜனநாயகத்தை நாம் பலப்படுத்த வேண்டும்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை விட நாட்டு மக்களின் பாதுகாப்பான வாழ்விற்கு முன்னுரிமையளிக்கத் தேவையில்லையா? நாடாளுமன்றத் தேர்தலின் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்ந்தும் அபாயகரமான நிலைக்குள் செல்லும் சந்தர்ப்பம் பாரதூரமான பாதிப்பு இல்லையா? உண்மையில் இந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் கொரோனா வைரஸ் வெகு துரிதமாக பரவக்கூடிய அபாயகரமான நிலைமையே தற்போது காணப்படுகிறது.

இந்நிலையில் தேர்தல் நடத்தப்பட்டால் கிடைக்கப்பெற்ற இந்த வெற்றிகள் அனைத்தும் காட்டிக் கொடுக்கப்படும். தேர்தல் நடத்தப்பட்டால் மக்கள் மிகப் பாரதூரமான அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும். இந்த கொரோனா வைரஸ் படிப்படியாகஅதிகரிக்கக்கூடும். மனிதவாழ்க்கையை அபாயத்திற்குள் தள்ளித் தேர்தலை நடத்துவது பொருத்தமல்ல. தேர்தல் நடைபெறும் போது சமூக இடைவெளி பேணப்படா மாட்டாது. தேர்தலை நடத்துவதற்காகச் செயற்படும் பொது மக்களும் அரச அதிகாரிகளும் பாரதூரமான அவதான நிலைமைக்கு தள்ளப்படுவர். எனவே வாதப் பிரதிவாதங்கள் இன்றி, இன, மத, கட்சி பேதம் இன்றி நாம் அனைவரும் ஐக்கியமாக நாடு முகங்கொடுத்துள்ள இப்பிரதானமான சவாலை வெற்றி கொள்ள வேண்டும். கொரோனா வைரஸை முழுமையாக தோல்வியடையச் செய்வதே அந்த சவாலாகும். கொரோனா வைரஸ் ஒழிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதாரத்துறையினருக்கும் பாதுகாப்புத்துறையினருக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாம் எமது கவனத்தை வேறு விடயத்தில் செலுத்த தயாராக இல்லை. கொரோனா வைரஸை தோல்வியடையச் செய்வதிலேயே எமது முழு கவனமும் இருக்கிறது. அந்த இலக்கைப் புறந்தள்ளி சில அரசியல் ஒழுங்கு நிரலுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கையை ஆபத்தில் இட்டுத் தேர்தலுக்குச் செல்ல முடியாது. இதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். எனவே நாம் அனைவரும் இலங்கையர் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து கொரோனா வைரஸைத் தோல்வியடையச் செய்வோம் என்று அனைவரிடமும் கோரிக்கை விடுகின்றோம். அத்தோடு நாடாளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். தனிநபர்களின் விருப்பு வெறுப்புக்களை விட நாட்டு மக்களே எமக்கு முக்கியமாகும். பொது மக்களின் கண்ணீருக்கு மத்தியில் தேர்தலை நடத்தி நாட்டை சீரழிக்க நாம் எந்த சந்தர்ப்பத்திலும் தயாராக இல்லை. நாம் அனைவரும் நாடு என்ற ரீதியில் ஐக்கியமாக கொரோனா ஒழிப்பிற்கு எதிராகக் கைகோர்ப்போம். கொரோனா வைரஸ் ஒழிப்பின் பின்னர் தேர்தலுக்கு முகங்கொடுப்போம். – என்றார்

## அரியாலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரியாலையைச் சேர்ந்த 60 வயதுடைய ஆணுக்கும் 61வயதுடைய பெண்ணுக்குமே கொரோனா வைரஸ் தொற்றுள்ளதாகப் பரிசோதனையின் மூலம் கண்டறியப்பட்டது.

இவர் இருவரும் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி அரியாலை தேவாலயத்தில் ஆராதனை நடத்திய சுவிஸ் போதகருடன் நெருங்கிப் பழகியவர்கள்.

அதனால் மார்ச் 22ஆம் திகதி பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு கண்காணிக்கப்பட்ட 20 பேரில் இவர்களும் உள்ளடங்குகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இனங்காணப்பட்ட இருவருடன் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 237ஆக உயர்வடைந்துள்ளது.

## 19 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் இன்று மாலை 4 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிவரை நீடிக்கும் என்று ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ள 2 பேருக்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 23 பேரினதும் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் பலாலிப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் 2 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் அரியாலை தேவாலயத்தில் கடந்த மார்ச் 15ஆம் திகதி ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 17 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

# பிரான்ஸில் கொரோனாவால் தமிழர் ஒருவர் பரிதாப மரணம்!

பாரிஸ், ஏப்.16

உலகை உலுக்கிவரும் கொரோனா கோரத் தாண்டவத்தால் புலம்பெயர்ந்து பிரான்ஸில் வாழ்ந்து வந்த மற்றுமொரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சங்கானையை பிறப்பிடமாகவும் பிரான்ஸின் வில்னெவ் சென் ஜோர்ஜ் பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரன் நவரத்தினம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தெய்வேந்திரன் நவரத்தினம் மூன்று பிள்ளைகளின் தந்தை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பிரான்ஸ், இத்தாலி, கனடா, பிரித்தானியா நாடுகளில் தமிழ் மக்கள் பலர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீசாலை இளைஞர் லண்டனில் கொரோனாவுக்கு பலி



மீசாலையைச் சேர்ந்த சாம்பசிவம் யசோதரன் (அசோகன்) என்ற இளைஞர் லண்டனில் கொரோனாவினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

## ஈஸ்டர் குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தகுதி தராதரம் பாராது தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட சிலர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் 119 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

## முடக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்துதனதுவேண்டுகோளுக்கிணங்க இந்த கமராக்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன என இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பேசிய இராணுவத் தளபதி, எதிர்காலத்தில் இராணுவத்தில் ட்ரோன் ரெஜிமெண்டைத் தொடங்கவுள்ளதாகக் கூறினார்.

## தனிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பூர் நோக்கி சுமார் 100 நபர்களை ஏற்றிச்சென்ற மூன்று பஸ்களில், இரண்டு பஸ்கள் கொழும்பு நோக்கி மரக்கறிகளை ஏற்றிச்சென்ற லொறியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் லொறியின் சாரதி உயிரிழந்துள்ளமையுடன், பஸ்ஸில் பயணித்த 29 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 26 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்து செல்லப்பட்டவர்கள் என்றும் ஏனைய மூவரும் கடற்படையினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் வறக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தை அடுத்து, தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்துசெல்லப்பட்ட மூவர் தப்பியோடியுள்ளனர் எனவும் அவர்களில் இருவர் பின்னர் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாதகல் நுணசை வித்தியாலயத்துக்கு நேற்று புதன்கிழமை கடற்படையினர் அழைத்துவரப்பட்டனர். அதனால் பாடசாலையைச் சூழவுள்ள பகுதியில் வசிக்கும் மக்களிடையே பதற்ற நிலை ஏற்பட்டது.

கொரோனா வைரஸ் தொடர்பான தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்கப்படப் போவதாக அந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டனர்.

மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அமைந்துள்ள பாடசாலையில் தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இது தொடர்பில் சம்பவ இடத்துக்குச் சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ், தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்க அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்தியாவிலிருந்து கடற்பரப்புகள் ஊடாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு போதைப்பொருள்கள் கடத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கு மேலதிக துருப்புக்களைத் தங்க வைப்பதற்கு கடற்படையினரால் கோரப்பட்டதற்கு அமைய மாதகல் நுணசை வித்தியாலயம் வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளும் மாதகலில் ஒரு பாடசாலையும் இவ்வாறு விமானப்படை மற்றும் கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுத்தேர்தலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மூன்றினதும் தலைவர் களான மாவை சேனாதிராசா, த.சித்தார்த் தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகிய மூவருடன் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் சேர்ந்து ஒப்பமிட்டு கூட்டாக இந்தக் கோரிக்கையை முன்வைப்பர் எனத் தெரிகின்றது.

இது தொடர்பில் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும், கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான விவரிவான உரையாடல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று தெரிகின்றது.

கொரோனா வைரஸ் ஆபத்து நீங்க முன்னர் பொதுத் தேர்தலை நடத்த எத்தனிக்கும் ஆபத்தான விளையாட்டில் இறங்க வேண்டாம் என்று தென்னிலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகள் பலவும் அரசையும், ஜனாதிபதியையும் கோரிவரும் நிலையில் அத்தகைய கோரிக்கைகள் எதுவும் இன்னும் தமிழர் தரப்பில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை என்பது தெரிந்ததே. (உ)

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிகழ்ந்துள்ளது. கணவன் – மனைவி ஒரே குடும்பத்தில் அடுத்தடுத்து மரணமான செய்தி கனேடிய தமிழர்கள் மத்தியில் பெரிதும் சோகத்தை உண்டுபண்ணியுள்ளது.

யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த சோதி என்றழைக்கப்படும் நாகராஜா தேசிங்குராஜா என்பவரும், நெடுந்தீவைச் சேர்ந்த அவருடைய துணைவியார் புஸ்பராணி நாகராஜாவும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.

இவர்களில் மனைவி கடந்த திங்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார். நேற்று கணவர் உயிரிழந்துள்ளார் என்று கனடாவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொரோனாத் தொற்றின் உச்ச கட்டத்தை இப்போது கடந்து வருகின்றதாம் இலங்கை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கருத்து



இலங்கையானது, கொரோனா வைரஸ் தொற்றின் உச்ச கட்டத்தைக் கடந்து வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

தற்போது உலகம் முழுதும் கொரோனா தொற்றால் 126,757 பேர் உயிரிழந்துள்ள நிலையில், இலங்கையில் கடந்த சில வாரங்களில் அரசாங்கம் எடுத்த சரியான முடிவுகள் காரணமாக, புதிய கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுபடுத்த முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் உறுதிப்படுத்தப்படும் தொற்றாளர்கள், தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருந்து மாத்திரமே அடையாளம் காணப்படுகிறார்கள் என்றும் நாட்டில் வைரஸ் தொற்றின் தாக்கம் குறைவடைந்து உள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் மாத்திரம் 15 தொற்றாளர்கள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களிலிருந்து கண்டுபிடிக்கப்படனர் என்றும் இவர்களில் 8 பேர், சுவிஸ் போதகரால் நடத்தப்பட்ட ஆராதனைகளில் கலந்துகொண்டவர்கள் என்றும், இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

இந்த 15 தொற்றாளர்களுடன் நாட்டில் மொத்தமாக 233 பேர் கொரோனா தொற்றாளர்கள் என உறுதிப்படுத்தப்பட்டு உள்ளனரென்றும் 165 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெறுகின்றனர் எனவும் 63 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அவசர கொரோனா தேர்தல் மரணங்களுக்கே வித்திடும்!

## எச்சரிக்கின்றார் மங்கள சமரவீர



ஒரு மாதத்துக்கும் மேலாக, கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டம் இந்த நாட்டுக்குள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், தேர்தலொன்றை நடத்துவதென்பது, இத்தனை நாள்களாக முன்னெடுத்த போராட்டத்தை வீண் விரயமாக்கிவிடும் என்று முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், இலங்கையிலிருந்து நூற்றுக்கு நூறு வீதம் கொரோனா ஒழிக்கப்படும் வரையில், தேர்தலை ஒத்திவைப்பதே சிறந்ததென்றும் அதுவே மக்களுக்குப் பாதுகாப்பானது என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தலெனச் சொல்லப்படுவது, தேர்தல் தினத்தில் வாக்குச் சாவடிக்குச் சென்று புள்ளடி போடுவது அல்லவென்றும், ஒவ்வொரு வேட்பாளரும் ஒவ்வொரு கட்சியும், சில வாரங்களாகவே உழைத்து, மக்களை ஒன்றுதிரட்ட வேண்டுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீடு வீடாகச் சென்று, வேட்பாளர்கள் பற்றிய அறிவிப்புப் பத்திரங்களை வழங்க வேண்டும். தங்களுடைய கட்சியின் கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டும். பொதுத் தேர்தல் எனும் போது, ஆயிரக்கணக்கான வேட்பாளர்களும், தங்களுக்கான வேட்பாளர் இலக்கம் பற்றி, பொது மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன், வாக்கெடுப்பு தினத்தில், பல பாடசாலைகளை, வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்த நேரிடும். வாக்கெடுப்புக்குப் பின்னரான 48, 72 மணித்தியாலங்கள் வரை, அரச ஊழியர்கள், சில அரச கட்டடங்களில் திரண்டு, வாக்குகளை எண்ண வேண்டும். இவ்வாறான பணிகளை முன்னெடுக்கவேண்டிய நிலையில், கொரோனா பின்னணியில் தேர்தலை நடத்துவது, பல உயிர்களைக் காவுகொடுப்பதாகிவிடும் என்றும், மங்கள தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேர்தலை நடத்தும் வரையில், கொரோனா வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக, நாடாளுமன்றம் ஊடாக நிதி ஒதுக்கீடுகளைச் செய்துகொள்ள வேண்டுமாயின், ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தைக் கூட்டி அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் எதிர்க்கட்சியினர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு அதற்காக ஒத்துழைப்பு வழங்க, தாங்கள் தயாரென்றும், அவர் தெரிவித்துள்ளார்.

# பேருவளைப் பகுதியில் மட்டும் 11,293 பேர் முடக்கத்துக்குள்!



கொழும்பு, ஏப்.16

கொரோனா தொற்றுக்குள்ளாக அதிகமானோர் இனங்காணப்பட்ட பேருவளை பிரதேசத்தில், முடக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த 11,293 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரென பேருவளை பிரதேச செயலாளர் சத்துர மல்ராஜ் நேற்றுத் தெரிவித்தார்.

சீனக் கொட்டுவ, பன்னில, கரந்த கொட, கங்கானம்கொட, வலதர, அம்பேபிட்டிய, அக்கரகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரென அவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய பொருள்களும் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளமையுடன், பாதுகாப்பு கடமைகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

பேருவளை பிரதேசத்தில் மாத்திரம் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளான 35 பேர் இதவரை இனங்காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து குறித்த பகுதி அபாய வலயமாக பெயரிடப்பட்டுள்ளது.

# ‘கொவிட் - 19’ என்னும் வைரஸ் போல ஆபத்தானது ‘மொட்டு - 20 ’ வைரஸ்



கொவிட் 19 எனும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலிலிருந்து, மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை உலக நாடுகள் எடுத்து வருகின்றன. எனினும், எமது நாட்டில் 'மொட்டு – 20' எனும் வைரஸ், நாட்டு மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறிவிட்டதென, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ்க்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைக்காமல், பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால், அது நாட்டு மக்களையே, பலிகொடுக்கும் பலி பூஜைக்கு ஒப்பான செயலாகிவிடுமென்றும் தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அவசர அவசரமாக பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சியாது, மொட்டு – 20 வைரஸாகும். அந்த வைரஸ், முழு நாட்டுக்குமே அச்சுறுத்தலாகி ஆபத்தாகிவிடுமென அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பான சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்படுமாயின் அதுவே, ஜனநாயகத்தின் வெற்றியாகும். எனினும், பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்படுமாயின், அதற்கு தற்போதைய அரசாங்கம் மட்டுமன்றி, ஜனாதிபதியும் பொறுப்புகூறவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகையால், கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டில் சூழ்கொண்டிருக்கின்றன நிலையில், பொதுத் தேர்தலை நடத்துவதற்கு, ஏற்புடைய காலப்பகுதி இதுவல்ல என்றார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு தேர்தல் தொடர்பில் யாது?

*'கொவிட் – 19' என்ற ஆபத்தான வைரஸ் அச்சுறுத்தலில் இருந்து மக்களை மீட்பதற்காக உலகம் போராடுகின்றது. ஆனால் அதற்கு மத்தியில் தனது குறுகிய அரசியல் நோக்கங்களை எட்டுவதற்காக அவசரப்பட்டுப் பொதுத்தேர்தலை நடத்தும் அரசின் முயற்சி 'மொட்டு – 20' என்ற வைரஸ் போலக் கட்டவிழ்கின்றது என்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின்* முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டார.

பாதுகாப்பான சூழலில் தேர்தல் நடத்தப்படுமானால் அது ஜனநாயகத்தின் வெற்றி. இல்லையேல் அது ஜனநாயகத்தின் பேரழிவு என்று அவர் சுட்டுவதில் அர்த்தங்கள் நிறைய உள்ளன.

அதேசமயம், *'அவசரக் கொரோனாத் தேர்தல் பல உயிர்களைக் காவு கொடுக்கும் மரணங்களுக்கு வழி வகுத்து விடும்'* – என்று முன்னாள் நிதி, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறுவதும் கவனிக்கப்பட வேண்டியது.

*"நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது உண்மைதான். இருப்பினும் நோய் முழுமையாகக் கட்டுப்படாத நிலையில் மே மாத இறுதியில் தேர்தலை நடத்தினால் மக்கள் ஒன்று கூடும் வாய்ப்புகள் அதிகரிப்பதன் காரணமாக கட்டுப்படுத்தப்பட்ட வைரஸ் மீண்டும் பரவும் நிலை ஏற்படலாம். அதேசமயம், அதனைத் தடுப்பதற்காக மக்கள் ஒன்று கூடுதலை வரையறை செய்தால் அது நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தடையாகி விடும்"* – என ஜே.வி.பியையும் உள்ளடக்கிய 'தேசிய மக்கள் சக்தி' வெளிப்படையாக நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றது.

*"பொதுமக்களின் கண்ணீருக்கு மத்தியில் தேர்தலை நடத்தி நாட்டை சீரழிக்க நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தயாராக இல்லை. நாம் அனைவரும் நாடு என்ற ரீதியில் ஐக்கியமாகக் கொரோனா ஒழிப்புக்கு எதிராகக் கைகோர்ப்போம். கொரோனா வைரஸ் ஒழிப்பின் பின்னர் தேர்தலுக்கு முகம் கொடுப்போம்."* – என்று அறிவித்திருக்கின்றார் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஆக, ஆளும் மொட்டுக் கட்சியினர், அவற்றின் கூட்டமைப்பைச் சேர்ந்தோரைத் தவிர ஏனைய தென்னிலங்கைக் கட்சியினர் எல்லாம், கொரோனா வைரஸ் பிரச்சினை தீர்க்கப்பட முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவது ஆபத்தானது, அபத்தமானது என்பதை வெளிப்படையாகவே – பகிரங்கமாகவே – கூறியிருக்கின்றனர்.

ஆனால் வடக்கு, கிழக்குத் தமிழர் தரப்பிலிருந்து இது தொடர்பில் தெளிவான அறிவிப்புகள் ஏதும் இன்னும் வெளிவரவில்லை.

ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் கருத்து வெளியிட்டனரே தவிர, தேர்தலை ஒத்திவையுங்கள் அல்லது தள்ளிப் போடுங்கள் என்று கூறவில்லை.

அப்படிப் பகிரங்கமாகக் கோரினால், எங்கே தேர்தலை சந்திக்கவும், மக்களை எதிர்கொள்ளவும் இவர்கள் பயந்து விட்டனர், அதனால்தான் தேர்தலை ஒத்திவைக்கக் கோருகின்றார்கள் என்ற எண்ணம் – கருத்து – தமது தமிழ் மக்கள் மத்தியில் தங்களைக் குறித்து ஏற்பட்டு விடுமோ என்ற பயம் – பீதி – அவர்களுக்கு.

இப்போதுதான் அப்படி தேர்தலைத் தள்ளிப்போடும் அறிவிப்பை ஒன்று கூடி விடுப்பது குறித்து கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியின் தலைவர்கள் தங்களுக்குள் குசுகுசுகின்றனர் என்று தகவல்.

தென்னிலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை ஒட்டி –

கொரோனா ஆபத்து நீங்கும் வரை பொதுத் தேர்தலை தள்ளிப் போட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையைத் தாங்களும் முன்வைக்க வேண்டும், அது நியாயமானது என்ற நிலைப்பாட்டுக்குக் கூட்டமைப்பு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

அது நல்லது.

சரி, ஏனைய தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தில் என்ன கூறப்போகின்றன? நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் இந்த இரண்டு கூட்டுகளிலும் அங்கம் வகிக்கும் பிற கட்சிகள் ஆகியவற்றின் நிலைப்பாடு யாது? தெளிவுபடுத்தினால்தான் தமிழ் மக்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியும்.

## யாழில் கொமெர்சல் வங்கியின் நடமாடும் வங்கிச் சேவை நாளை

கொமெர்சல் வங்கியின் நடமாடும் வங்கிச் சேவை நாளை 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பின்வரும் ஒழுங்கில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன:-

★ கல்வியங்காடு ஆடியபாதம் வீதி (பேச்சியம்மன் கோவில்) -முற்பகல் 8.30 - 9.15
★ நந்தாவில் அம்மன் கோவில் - முற்பகல் 9.45- 10.30
★ இணுவில் கந்தசாமி கோவில் - முற்பகல் 10.45 மு. ப - 11.30
★ புதிய பள்ளிச்சந்தி நாவாந்துறை - நண்பகல் 12.00 - பிற்பகல் - 12.45
★ குருநகர் அண்ணா சிலையடி - பிற்பகல் 1.15 - 2.00
★ கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் - பிற்பகல் 2.15 - 3.00

## கொரோனா ஒழிப்பில் அரசு எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளும் வெற்றியே!

### புகழாரம் சூட்டுகின்றார் முன்னாள் பிரதமர் ரணில்

கொவிட் 19 வைரஸை ஒழிக்க அரசாங்கம் எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளும் வெற்றியளித்துள்ளன எனவும், இது விடயத்தில் சுகாதார பிரிவினர் மற்றும் பாதுகாப்பு பிரிவினரின் செயற்பாடுகளைத் தாங்கள் வரவேற்கின்றனர் எனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்த கருத்துகள் வருமாறு : -

நாடுகளின் பொருளாதாரம் மிகப்பெரிய சரிவை எதிர் நோக்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்தில் பலமிக்க நாடுகள் நலிவுற்றுள்ள நாடுகளுக்கு உதவியளிக்க வேண்டும்.

கொரோனாவை எதிர்கொள்ள நாட்டை முடக்க எடுத்த தீர்மானம் வரவேற்கதக்கது.

சுகாதார சேவைகள், பொலிஸார், பாதுகாப்பு துறை அதிகாரிகள் அனைவரும் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றனர்.

தனியார் துறையும் பொது மக்களும் இணைந்து பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றனர். இது வரவேற்கதக்கது.

ஆனால் அரசாங்கத்தின் தோல்வி என்ன வென்றால், ஜனவரி மாதத் தொடக்கத்தில் தேவையான உபகரணங்களை பெறத் தவறியதை கூறலாம்.

ஆனால் தற்போது போதுமான உபகரணங்கள் உள்ளன. தற்போதைய நிலையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

நாம் இதுவரை எதிர்கொண்ட மிகவும் சவாலான காலங்களில் இதுவும் ஒன்றாகும். ஏனெனில் உலகப் போர் நடைபெற்ற காலங்களில் கூட எதிரி யார் என எங்களுக்குத் தெரிந்திருந்தது.

ஆனால் இந்த நேரத்தில் எங்கள் எதிரி யார் எனத் தெரியாது. மேலும் அனைத்து பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளன. உலகத் தலைவர்கள் யாராவது முன் வந்து இதனைச் சரி செய்ய வேண்டும்.- என்றார்.

இலங்கை மீண்டும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் சீனா விடம் கடன் பெற வேண்டுமா என இதன் போது ஊடகவியலாளர் வினவினார்.

நாங்கள் சீனாவிடம் கேட்கலாம், ஆனால் அவர்கள் உலக நாடுகள் குறித்து கொள்கை ரீதியிலான முடிவை எடுக்க வேண்டும். காரணம் ஒரு நாட்டுக்கு கொடுத்தால் மற்றைய நாடுகளுக்கும் வழங்க வேண்டும்.

சர்வதேசநாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சு நடத்தி வருவதாக நான் நினைக்கிறேன். ஆனால் அது கடினமாக இருக்கும். எப்படியும் தவணைகளை உரியவாறு செலுத்துவோம்.

எப்படியிருந்தாலும் இந்த வருடத்தில் அல்லது அடுத்த வருடத்தில் நாம் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வோம். எனவே பணக்கார நாடுகள் ஏனைய நாடுகளுக்கு ஓரளவு நிவாரணத்தை வழங்க வேண்டும். - என்றார் ரணில்.

தற்போதைய காலத்தில் மக்கள் எதைப் பார்க்கவேண்டும், படிக்கவேண்டும் என்பதைப் பற்றி நீங்கள் பரிந்துரைக்கக்கூடிய ஏதாவது இருக்கிறதா என ஊடகவியலாளர் வினவினார்.

இதற்குப் பதிலளித்த அவர் இரண்டு நாள்களுக்கு முன்பு 'ஹோட்டல் மும்பை' என்ற பழைய இந்தித் திரைப்படத்தைப் பார்த்தேன். இப்போது பல புதிய திரைப்படங்கள் உள்ளன.

ஆகவே நான் பார்க்க விரும்புவதை நீங்கள் தான் கூற வேண்டும். நெட்ஃபிக்ஸில் பலதிரைப்படங்களும், நாடகங்களும் உள்ளன. எனவே என்ன பார்க்க வேண்டும் என்று நீங்களே சொல்ல வேண்டும். - என்றார் ரணில்.

## பொதுத்தேர்தல் நடத்துவது குறித்து ஆராய அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக்கூட்டுங்கள்!

### தேர்தல் ஆணையகத்திடம் சஜித்தின் கட்சி கோரிக்கை

பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து ஆராய்வதற்காக உடனடியாக சர்வக்கட்சிக் கூட்டத்தை கூட்டுமாறு ஐக்கிய மக்கள் சக்தி, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை கேட்டுள்ளது.

அந்த கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்ஜித் மத்தும பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி இந்த கோரிக்கையை முன்வைத் துள்ளார்.

தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு தேர்தலை நடத்துவது குறித்து உயர் நீதிமன்றத்தின் வியாக்கியனத்தை கேட்குமாறு ஜனாதிபதிக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பிய கடிதம் குறித்து ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரும் கவனம் செலுத்தியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தீர்மானத்தை தமது கட்சி பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளமையோடு, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை தற்போதைய நிலையில் நடத்த முடியாது எனவும் அவர் சுட்டியுள்ளார்.

ஆகவே இது தொடர்பில் கலந்துரையாடவே சர்வகட்சி கூட்டத்தை நடத்துமாறு தான் கோரிக்கை விடுக்கிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாளை

17.04.2020
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: அவிட்டம் பி.இ 04.33
திதி :தசமி மு.இ 11.35 வரை
இராகுகாலம் : 10.34 - 12.04
சுப நேரம் : 06.04 - 07.34

# பிரிட்டனில் அரசிடம் நிவாரணம் கேட்கும் பாலியல் தொழிலாளர்கள்

கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தங்கள் வாழ்வாதாரத்தை முற்றிலுமாக இழந்து விட்டதாக இங்கிலாந்து விலைமாதர்கள் அரசிடம் அவசர நிதி வழங்குமாறு கேட்டுள்ளனர்.

கொரோனா பரவிய நாடுகளில் எல்லாவற்றிலுமே ஊரடங்கு காரணமாக தொழில்கள் முடங்கிப்போய் பெரும்பாலான கூலித்தொழிலாளர்களுக்கு வருவாய் இழப்பு கடுமையாக ஏற்பட்டுள்ளது.

இதில், ஆதிகாலத்தில் இருந்தே மனித குலத்துடன் இணைந்திருக்கும் பாலியல் தொழிலும் பலத்த அடி வாங்கி இருக்கிறது. உலக நாடுகள் அனைத்திலுமே கொரோனா ஊரடங்கால் விலைமாதர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்களது நிலை குறித்து மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவர் கள் பரிதவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், அண்மையில் வேலை இழப்பால் வருமானம் இன்றி அல்லாடும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அவசர நிதி உதவி வழங்குவதாக இங்கிலாந்து அரசு அறிவித்தது.

இந்தப் பட்டியலில் பாலியல் தொழிலில் ஈடுபடும் விலைமாதர்கள் கூட்டமைப்பு இடம் பெறவில்லை. இதனால் அந்த நாட்டின் விலைமாதர்கள் பெரும் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

இதுபற்றி இங்கிலாந்தில் வாழும் விலைமாதர்கள் கூட்டமைப்பின் செய்தி தொடர்பாளர் கூறியதாவது:-

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது முதல் எங்கள் வாழ்வாதாரத்தை முற்றிலுமாக இழந்து விட்டோம். மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கி விட்டனர். மனைவியை விட்டு கணவன் மார்களால் அகல முடியவில்லை. எங்களுடன் போனில் பேசுவதற்கே அவர்கள் பயப்படுகிறார்கள். திருமணம் ஆகாத இளைஞர்களோ பெற்றோரின் கண்காணிப்பில் இருக்கின்றனர். செயலிகள் வழியாக எங்களுக்கு அழைப்பு வருவதும் அடியோடு நின்று போய்விட்டது.

இதனால் வாடிக்கையாளர்கள் யாரும் கிடைக்காமல், கையில் பணம் எதுவுமின்றி எங்களது நிலை படுமோசமாக உள்ளது. பட்டினி கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகிறோம்.

நாடு முழுவதும் எங்கள் கூட்டமைப்பில் உள்ள ஒரு லட்சத்துக்கும் மேலான பெண்களின் கதியும் இதுதான். நாங்களும் வீட்டு வாடகை கொடுக்க வேண்டும். மின்சாரம், குடிநீர், போன் ஆகியவற்றுக்கு கட்டணம் செலுத்த வேண்டிய நெருக்கடியும் இருக்கிறது.

எனவே அவசர பண உதவி பெறுவோர் பட்டியலில் எங்களையும் சேர்த்து வறுமையின் பிடியில் இருந்து மீட்க வேண்டும். - இவ்வாறு அவர் கூறினார்.

# ட்ரம்பின் செயல் குறித்து சீனா கவலை தெரிவிப்பு

உலக சுகாதார அமைப்புக்கு நிதி வழங்குவதை இடைநிறுத்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டமை தொடர்பில் சீனா கடும் கவலை வெளியிட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு தனது அடிப்படைக் கடமையிலிருந்து நழுவிவிட்டதாகவும், சீனாவுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டிய ட்ரம்ப், அந்த அமைப்புக்கு அமெரிக்கா சார்பில் நிதி வழங்குவதை இடை நிறுத்திவிட்டார்.

கரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வரும் நிலையில், அமெரிக்கா நிதியை நிறுத்துவதற்கு உகந்த நேரம் இதுவல்ல என்று ஐ.நாவும். கவலை தெரிவித்தது. இந்த நிலையில் அமெரிக்காவின் முடிவுக்கு சீனாவும் கவலை தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்புக்கு வழங்கிய நிதியை நிறுத்திய அமெரிக்காவின் முடிவு தீவிர கவலையை அளித்துள்ளது. இது ஒரு முக்கியமான தருணம். அமெரிக்காவின் முடிவு உலக சுகாதார அமைப்பின் திறன்களை பலவீனப்படுத்தும். தொற்றுநோய்க்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பைக் குறைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வுஹான் நகரில் உருவான கொரோனா வைரஸ் அங்கு ஏற்படுத்திய பாதிப்பை விட அமெரிக்காவில் அதிகம் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் இதுவரை 25 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 6 லட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

# கொரோனாவுக்கு மத்தியிலும் தென்கொரியாவில் வாக்களிப்பு

கொரோனா வைரஸ் உலகையே ஆட்டிப்படைக்கும் நிலையில், தென் கொரியாவில் கடும் பாதுகாப்பு நடைமுறைகளுடன் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாகுச் சாவடிகளுக்குச் சென்றவர்களுக்கு காய்ச்சல் இருக்கின்றதா என்று சோதிக்கப்பட்டது. பின்னர் கைகளை நன்கு கழுவிக் கொண்ட பின்னர் சுமார் ஒரு நிமிடம் காத்திருந்த பின்னரே வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

வாக்காளர்களின் உடல் வெப்பநிலை 37.5 டிகிரி செல்சியசுக்கும் மேல் அதிகரித்து இருந்தால் அவர்கள் ஒரு தனி சாவடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அவர்களை வாக்களிக்க வைக்கிறார்கள்.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் வாக்களிக்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வீடுகளில் தனிமைப்படுத்திக்கொண்ட 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கும் வாக்களிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மற்ற வாக்காளர்களுக்கான வாக்குப்பதிவு நேரம் 6 மணிக்கு முடிவடைந்ததும், இவர்கள் ஒரு மணி நேரம் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

கொரோனா அச்சத்தால் மக்கள் வாக்களிப்பதற்கு வரமாட்டார்கள் எனக் கருதப்பட்ட நிலையில், மக்கள் அமைதியான வரிசையில் காத்திருந்து வாக்களித்தார்கள்.

சீனாவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தோன்றிய கொரோனா வைரஸ் முதலில் அண்டை நாடான தென் கொரியாவுக்குதான் பரவியது. அப்போது சீனாவுக்கு அடுத்தபடியாக கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக தென்கொரியா இருந்தது.

எனினும் அந்த நாடு தீவிர தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கொரோனாவை கட்டுப்படுத்தியது. தற்போது அங்கு கொரோனா தாக்கம் குறைந்து வருகிறது. அதன்படி தென் கொரியாவில் கொரோனா தாக்குதலுக்கு ஆளான 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரில் 7,500க்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவை அடக்க பேய் வேடமிடும் ஊர்!

## இந்தோனேசியாவில் நூதன வழிமுறை

இந்தோனேசியாவில் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதை தடுக்கும் வகையில் இரவு நேரத்தில் மனிதர்களுக்குப் பேய் வேடமிட்டு, கொரோனா பாதிப்பை கட்டுப்படுத்த நூதன வழிமுறையைப் ஊர் மக்கள் கடைப்பிடித்து வருகிறார்கள்.

கொரோனா என்ற உயிர்க்கொல்லி வைரஸ் உலகையே அச்சுறுத்தி வருகிறது. இந்த கொடிய வைரசை அழிக்க இதுவரை தடுப்பு மருந்துகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், தனிமைப் படுத்தல் மற்றும் சமூக விலகலைக் கடைப்பிடிப்பதன் மூலம் மட்டுமே வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்கிற நிலை உள்ளது.

இதனால் கொரோனா பாதிப்பை எதிர்கொண்டு வரும் பெரும்பாலான நாடுகள் தேசிய அளவில் ஊரடங்கை நடைமுறைப்படுத்தி, மக்களை வீடுகளுக்குள்ளேயே இருக்க அறிவுறுத்தி வருகின்றன. ஆனாலும் ஒரு சில நாடுகளில் மக்கள் ஊரடங்கை உதாசீனப்படுத்தி வழக்கம்போல் வீதிகளில் நடமாடி வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தோனேசியா நாட்டின் ஜாவா தீவில் உள்ள கெபு என்ற கிராமத்தில் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதை தடுக்க ஒரு நூதன நடவடிக்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மக்களை பயமுறுத்தி வீடுகளுக்குள்ளேயே இருக்க செய்யும் விதமாக, இரவு நேரத்தில் மனிதர்களுக்கு பேய் வேடமிட்டு சாலைகளில் உலாவவிட்டுள்ளார் அந்த கிராமத்தின் தலைவர்.

இதுபற்றி அவர் கூறுகையில், நாங்கள் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தினோம். இது நல்ல பயனளித்துள்ளது. ஆரம்பத்தில் நாங்கள் இதை தனியாக செய்துவந்தோம். தற்போது எங்களுடன் பொலிஸாரும் கைகோர்த்துள்ளனர் என்றார்.

# கொரோனா சிறப்பு மருத்துவமனையை இழுத்து மூடியது சீனா; நோயாளி இல்லை



கொரோனா வைரஸ் சிகிச்சைக்காக இரு வாரங்களில் கட்டிய சிறப்பு மருத்துவமனையை சீன அரசு மூடியுள்ளது.

கொரோனா வைரஸ் முதன் முதலில் சீனாவின் வுகான் நகரில் தான் கண்டறியப்பட்டது.

வுகான் நகரில் மிக வேகமாக கொரோனா பரவியதும், கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 9 நாட்களில் ஆயிரம் படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டியது.

சீனாவில் தற்போது கொரோனாவின் தாக்கம் கணிசமாகக் குறைந்து கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. வுஹான் நகரம் திறந்துவிடப்பட்டிருக்கிறது. கட்டுப்பாடுகள், விதிமுறைகள் இருந்தாலும் மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், வுஹான் நகரில் கட்டப்பட்ட சிறப்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கடைசி நோயாளியும் உடல்நலம் பெற்று வீடு திரும்பினார். இதையடுத்து, அந்தச் சிறப்பு மருத்துவமனை மூடப்படுவதாகச் சீன அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே நாட்டில் கொரோனா மையமாகத் திகழ்ந்த ஹூபேயிலிருந்து 3 மாதங்களாக அயராது மக்கள் பணியாற்றிய மருத்துவ உதவிக்குழு மாகாணத்திலிருந்து வெளியேறியது, குழுவிலிருந்த அனைவருக்கும் கையை அசைத்து வாழ்த்தி உற்சாகப் பிரியாவிடையை மக்கள் அளித்தனர்.

பீஜிங் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து சுமார் 180 பேர் கொண்ட மருத்துவக் குழு ஜனவரி 26 அன்று வுஹான் வந்தது. இதில் 179 பேர் வுஹானிலிருந்து வெளியேறினர், காரணம் அங்கு கொரோனா அடக்கி ஒடுக்கப்பட்டது.

சிறிய அளவில் நோயாளிகள் இன்னமும் முழுதும் குணமடையாத நிலையில் உள்ளனர். இவர்களுக்கு உதவ சிறிய குழு மட்டும் இன்னும் உள்ளது இவர்களும் விரைவில் குணமடைந்து வீடு திரும்புவார்கள் என்று டாங்ஜி மருத்துவமனை மருத்துவர் குவோ ஃபேபன் என்பவர் சினுவா செய்தி ஏஜென்சிக்குத் தெரிவித்தார்.

வூஹானில் ஷோங்கே சர்வதேச விடுதியில் இன்று காலை மருத்துவக் குழுவிற்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது.

விடுதியின் சமையலறை உதவியாளர் ஒருவர் கூறும்போது, இவர்கள் அனைவரும் இரவு பகல் பாராது உழைத்தனர். சில காலை உணவு சாப்பிடும் போதே தூங்கி விழுவதைப் பார்த்திருக்கிறேன், நமது இதயம் கனிந்த நன்றிக்கு உரித்தானவர்கள் என்றார்.


பிரியாவிடை முடிந்து இவர்கள் வாகனத்தில் புறப்பட்ட போது பொலிஸ் காவல் வாகனப் பாதுகாப்புடன் சென்றனர், தெருக்கள் முழுதும் மக்கள் நின்று இவர்களுக்கு கையை அசைத்து உற்சாகமூட்டி தங்கள் நன்றிகளைப் பதிவு செய்தனர்.

ஹூபேய்க்கு மட்டும் சுமார் 42 ஆயிரம் மருத்துவ பணியாளர்கள் வந்து அயராது பணியாற்றியுள்ளனர். இவர்கள் கட்டம் கட்டமாக ஹூபேயிலிருந்து மார்ச் 17ஆம் திகதி முதல் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மக்கள் இவர்களை நன்றிக்கடனுடன் பார்த்து கையை அசைத்து உற்சாகமூட்டியதாக சினுவா செய்தி ஏஜென்சி தெரிவிக்கிறது.

## பிரார்த்தனை மட்டும் போதாது உதவிக் கரமும் நீட்ட வேண்டும்

### தலாய் லாமா தெரிவிப்பு



பிரார்த்தனை மட்டும் போதாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம். இந்த வைரஸும் கடந்து போகும் என்று புத்த மதத் தலைவர் தலாய் லாமா தெரிவித்தார்.

உலகம் முழுவதும் 20 லட்சம் பேரிடம் பாதிப்பை ஏற்படுத்தி, 1 லட்சத்து 28 ஆயிரம் பேரை காவு கொண்டுள்ள கொரோனா வைரஸ் மிகப்பெரிய வரலாற்று சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. இதுகுறித்து இன்று கருத்துத் தெரிவித்த திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா நம்பிக்கையோடு தொடர்ந்து செயல்படுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வுஹானில் உள்ள கொரோனா வைரஸ் பற்றிய செய்தி வெளிவந்ததிலிருந்து, சீனாவிலும் மற்ற எல்லா இடங்களிலும் உள்ள எனது சகோதர சகோதரிகளுக்காக நான் பிரார்த்தனை செய்து வருகிறேன். இந்த வைரஸிலிருந்து யாரும் தப்பிக்க முடிவதில்லை. உலகப் பொருளாதாரம் மற்றும் நமது சொந்த வீடுகளின் அன்புக்குரியவர்கள் மற்றும் எதிர்காலத்தைப் பற்றி நாம் அனைவரும் கவலைப்படுகிறோம். ஆனால் பிரார்த்தனை மட்டும் இதற்குப் போதாது.

இதற்கு ஏதாவது தீர்வு கண்டுபிடிக்க முடிந்தால் முயற்சி செய்து பார்ப்போம். இல்லையெனில் உணர்ச்சியற்ற நிலையில் இதனை எதிர்கொள்வோம். இது தானாக நம்மைக் கடந்து போய்விடும். பௌத்த கண்ணோட்டத்தில், ஒவ்வொரு உணர்வும் துன்பம் மற்றும் நோய், முதுமை மற்றும் இறப்பு ஆகியவற்றின் உண்மைகளை அறிந்திருக்கிறது. ஆனால் கோபத்தையும் பீதியையும் பேராசையையும் வெல்ல நம் மனதைப் பயன்படுத்துவதற்கான திறனும் நம்மிடம் உள்ளது என்கிறது பௌத்தம்.

முழு உலகமும் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதாக பவுத்தர்களான நாங்கள் நம்புகிறோம். அதனால்தான் நான் பெரும்பாலும் உலகளாவிய பொறுப்பு பற்றிப் பேசுகிறேன். இந்தக் கொடூரமான கொரோனா வைரஸின் பாதிப்பு ஒரு நபருக்கு என்ன நடக்கிறது என்பது விரைவில் மற்ற எல்லா உயிரினங்களையும் பாதிக்கும் என்பதைக் காட்டுகிறது.

கொரோனா வைரஸ் நோயாளிகளைக் காப்பாற்றுவதில் மருத்துவமனைகளில் இரக்கமுள்ள அல்லது ஆக்கபூர்வமான செயல்கள் நடக்கின்றன. மற்றவர்கள் சமூக விலகலைப் பின்பற்றினாலும் பலருக்கு உதவக்கூடிய ஆற்றல் கிடைக்கும்.

இந்த நெருக்கடி, நாம் அனைவரும் நம்மால் முடிந்த இடத்தில் பொறுப்பேற்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இதுபோன்ற எதிர்கால அச்சுறுத்தல்களிலிருந்து நமது எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், பழைய சூழல் திரும்பவும் மருத்துவர்களுடனும் செவிலியர்களுடனும் ஒத்துழைப்போம். அவர்களின் அனுபவ அறிவியலுடன் காட்டும் தைரியத்தை நாம் இணைத்துக் கொள்ள வேண்டும்.

உலகளாவிய ஆரோக்கியத்திற்கு அதிகரித்து வரும் அச்சுறுத்தலைத் தொடர்ந்து தெரிந்து கொள்ள கரோனா செய்திகளுடன் தொடர்பிலிருங்கள்.

அச்சம் மிகுந்த இந்த நேரத்தில், முழு உலகத்தின் நீண்டகால சவால்கள் மற்றும் சாத்தியக் கூறுகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நமது நீல கிரகத்தில் உண்மையான எல்லைகள் இல்லை என்பதை விண்வெளியில் இருந்து நம் உலகின் புகைப்படங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. எனவே, நாம் அனைவரும் அதைக் கவனித்து, காலநிலை மாற்றம் மற்றும் பிற அழிவு சக்திகளைத் தடுக்க உழைக்க வேண்டும். ஒருங்கிணைந்த, உலகளாவிய பொறுப்புடன் ஒன்றிணைவதன் மூலம் மட்டுமே நாம் எதிர்கொள்ளும் முன்னோடியில்லாத சவால்களைச் சந்திப்போம் என்ற எச்சரிக்கையாகவே இந்த கரோனா வைரஸ் தொற்று நோய் செயல்படுகிறது. இவ்வாறு தலாய் லாமா தெரிவித்துள்ளார்.

# 170 இந்திய மாவட்டங்களில் கொரோனா தீவிரப் பரவல்

இந்தியாவில் 170 மாவட்டங்கள் கொரோனா தீவிரப் பகுதிகள்என்றுசுகாதாரத்துறைஅடையாளப்படுத்தியுள்ளது.

கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் வகையில் இந்தியா முழுவதும் மே 3ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டு உள்ளது

தற்போதைய நிலவரப்படி இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 12 ஆயிரத்து 320 ஆக அதிகரித்துள்ளது என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மத்திய சுகாதாரத்துறையின் இணை செயலாளர் லாவ் அகர்வால் நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

கொரோனா பரவும் மைய இடங்களாக விளங்கும் பகுதிகளை கொரோனா தீவிரப் பகுதிகள் எனவும், கொரோனா பாதிப்பு ஏற்படாத பகுதிகளை கொரோனா தீவிரமற்ற பகுதிகள் எனவும் மாவட்டங்களை நாங்கள் வரிசைப்படுத்தியுள்ளோம். இதன்படி, 170 மாவட்டங்கள் கொரோனா தீவிரப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

207 மாவட்டங்கள் சாத்தியமான ஹாட்ஸ்பாட்கள் / ஹாட்ஸ்பாட்கள் அல்லாதவை என்று அடையாளம் கண்டுள்ளோம். நாட்டில் கொரோனா தொற்று இன்னும் சமூக பரவலாக மாறவில்லை. உள்ளூரில் சில பரவல் மட்டுமே ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த பல வேறு கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளின் உத்திகளை நடைமுறைப் படுத்துவதுதான் மிகப்பெரிய சவாலாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## வாரணாசியில் சிக்கியிருந்த 127 தமிழர்களுக்கும் விடிவு!



இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட தமிழர்களில் 127 பேர் 3 பேருந்துகளில் சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். சுமார் ஆயிரத்து 800 கி.மீ. தொலைவில் மூன்று மாநிலங்கள் கடந்து இன்று இவர்கள் சென்னை சேரும் வாய்ப்புகள் உள்ளன.

கடந்த பெப்ரவரி மாத இறுதியில், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட வட இந்தியாவிற்கு ஆன்மிகச் சுற்றுலா செல்ல பல தமிழர்கள் கிளம்பினர். இவர்களில் சுமார் 400 பேர் தெய்வீக நகரமும் பிரதமர் நரேந்திர மோடியின் தொகுதியுமான வாரணாசியில் சிக்கினர்.

இவர்களுக்கு வாரணாசியின் குமாரசாமி மடம், நாட்டுக் கோட்டை சத்திரம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தால் உணவு, தங்குமிடம் அளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டனர். பெரும்பாலும் முதியவர்கள் அதிகமாக இருந்தமையால் தம் வீட்டை விட்டு வெளியில் உள்ளதன் தாக்கம் அதிகம் ஏற்பட்டுள்ளது. இதனால், மனச்சோர்வு அடைந்தவர்கள் தாங்கள் வீடு திரும்ப உதவ வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இதற்காக முன்வந்த வாரணாசி மாவட்ட அரசு நிர்வாகம் அவர்களது பயணச்செலவிலான பேருந்துகளில் செல்ல அனுமதி அளித்தது.

இவர்களில் 127 பேர் நேற்றுமுன்தினம் இரவு வாரணாசியில் இருந்து கிளம்பி சென்னை வந்து கொண்டிருக்கின்றனர். வழியில் இறங்க அவர்களில் எவருக்கும் அனுமதி இல்லாததால் பிஸ்கட், பிரெட், குடிநீர் மற்றும் பழவகைகளும் குமாரசாமி மடம் சார்பில் கொடுத்தனுப்பப்பட்டு உள்ளது.

## எச்சில் துப்பினால் இனிமேல் இந்தியாவில் ரூ. 1,000 அபராதம்

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க இந்திய அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், பொது இடங்களில் எச்சில் துப்பினால் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ஓராண்டு வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

மேலும், பொது இடங்களுக்கு மக்கள் செல்லும்போது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, பொது இடங்களில் எச்சில் துப்புவோருக்கு அபராதம் அல்லது ஓராண்டு சிறையும் அல்லது இரு தண்டனையும் சேர்த்து தேசிய பேரிடர் மேலாண்மை சட்டம் பிரிவு 51(பி)ன் கீழ் வழங்கப்படும் என மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின்படி, பொது இடங்களில் எச்சில் துப்புவது அபராதம் மற்றும் தண்டனைக்குரிய குற்றமாகும். மது, குட்கா, புகையிலை போன்றவற்றின் விற்பனையும் தடை செய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "மாவட்ட ஆட்சியர் நடைமுறைப்படுத்தி உத்தரவுகளை மதிக்காதவர்களுக்கு அபராதமும், தண்டனையும் தேசிய பேரிடர் மேலாண்மைச்சட்டம் 2005 இன் கீழ் வழங்க வேண்டும்" என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் என்பது பாதிக்கப்பட்டவர்கள் தும்முதல், இருமுதல் மற்றும் எச்சில் துப்புதல் மூலம் பரவும் அபாயம் இருப்பதால் கடும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால் பொது இடங்களில் எச்சில் துப்புவதைத் தவிர்க்கும் செயலை மக்கள் பெரும்பாலும் தீவிரமாக எடுத்துக்கொள்வதில்லை.

மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவுக்குப் பின், மும்பை மாநகராட்சி விடுத்த எச்சரிக்கையில் பொது இடங்களில் எச்சில் துப்புவோருக்கு 1000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என உத்தரவிட்டுள்ளது.

மேலும் பல மாநிலங்களும் இந்த உத்தரவை அமல்படுத்தியுள்ளன.

# ஊரடங்கு சமயத்தில் நீச்சல் குளத்தில் கும்மாளமிட்ட அமைச்சருக்குச் சிக்கல்

ஊரடங்கு சமயத்தில் நீச்சல் குளத்தில் குளித்து நேரத்தைக் கழித்த கர்நாடக மருத்துவக் கல்வித் துறை அமைச்சர் சுதாகருக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. அவரை உடனடியாக அமைச்சரவையில் இருந்து நீக்குமாறு காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக்குமார் வலியுறுத்தியுள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக 8 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 230க்கும் மேற்பட்டோருக்கு தொற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஊரடங்கு சமயத்திலும் நாளுக்கு நாள் பாதிப்பு அதிகரித்துவருவதால் மக்கள் நடமாட்டத்தைத் தடுக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் கர்நாடக மருத்துவக் கல்வித் துறை அமைச்சரும், கொரோனா பொறுப்பு அமைச்சருமான சுதாகர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது ட்விட்டர் பக்கத்தில், "நீண்ட காலத்துக்குப் பிறகு என் குழந்தைகளுடன் சேர்ந்து நீச்சல் அடித்தேன். அங்கும் சமூக விலகலைப் பராமரித்தேன்.ஹா..ஹா.." என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் பாரதிய ஜனதாக் கட்சியினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து சுதாகர் சில மணி நேரங்களிலே அந்தப் புகைப்படத்தை நீக்கினார்.

இதற்கு கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவா டி.கே.



சிவக்குமார், "உலகமே கொரோனா வைரஸ் பிரச்சினையில் சிக்கித் தவித்து வருகிறது. கர்நாடகாவில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதால் போதிய சிகிச்சை வசதிகள் இருக்கிறதா? என மக்கள் சந்தேகம் அடைந்துள்ளனர். இந்த நிலையில் கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான பொறுப்பை எடுத்துக்கொண்ட மருத்துவர் சுதாகர், நீச்சல் குளத்தில் நேரம் செலவிட்டு இருப்பது பொறுப்பற்ற செயலாகும். அவரது இந்தச் செயல் தார்மீக மற்றும் அரசியல் நெறிமுறைக்கு எதிரானது.

எனவே சுதாகர் உடனடியாக தன் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். இல்லாவிடில் முதல்வர் எடியூரப்பா அவரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

# கொரோனாவை தோற்கடிக்கும் போர்வையில் ஜனநாயகத்தை வலுவிழக்கச் செய்ய முயற்சி!

## அதைத் தோற்கடிக்க மக்களை அழைக்கிறது ஜே.வி.பியின் 'தேசிய மக்கள் சக்தி' அமைப்பு



கொரோனாவை தோற்கடிக்கும் போராட்டம் என்ற போர்வையில் ஜனநாயகத்தை வலுவிழக்கச் செய்யும் அரசாங்கத்தின் முயற்சியை தோற்கடிப்போம் என்று ஜே.வி.பி. தரப்பையும் உள்ளடக்கிய 'தேசிய மக்கள் சக்தி' அமைப்பு மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்திருக்கும் அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

இந்த வேளையில் நாம் அனைவரும் நாடென்ற வகையில், தேசத்தவர்களாக எமது முதன்மை கவனம் COVID 19 வைரஸை தோற்கடிப்பதற்காக செலுத்தப்பட்டுள்ளது. இந்த உயிர்கொல்லி வைரஸை தோற்கடித்தல் எமது முதன்மையான விடயம் என்பதனால், இதற்கு முன்னரும் குறிப்பிட்டது போன்று தேசிய மக்கள் சக்தி கொரோனாவை தோற்கடிக்கும் போராட்டத்துக்கு தனது உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்கி வருகிறது. கொரோனாவை தோற்கடிக்கும் போராட்டத்தில் இணைந்துள்ள சுகாதார துறையினர் உள்ளிட்ட அனைவரதும் அர்ப்பணிப்பான பங்களிப்பு காரணமாக இந்த பேரழிவு நிலையை விரைவாக தோற்கடிக்கலாம் என நம்புகிறோம்.

COVID 19 வைரஸை தோற்கடிப்பதற்காக பங்களிப்பு செய்வதுடன், எம் முன்னால் தோன்றி வரும் - நாட்டுக்கும், மக்களுக்கும் தாக்கம் ஏற்படுத்தும் - பல சவால்கள் தொடர்பில் இந்த நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்கவேண்டும்எனக்கருதுகிறோம்.

01. COVID 19 வைரஸின் தாக்கமும், அந்த வைரஸை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் காரணமாக உணவு உள்ளிட்ட உற்பத்தி மற்றும் சேவை துறை உலகளாவிய ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது. அது உலக பொருளாதார நெருக்கடிக்கு வழி சமைக்கும்.

இலங்கையும் நாடென்ற வகையில் இந்த சவாலுக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே கடன் பொறியில் சிக்கி, கடன் தவணை செலுத்த முடியாதளவு பாரிய நெருக்கடி நிலையிலேயே இலங்கை பொருளாதாரம் இருந்தது. கொரோனா காரணமாக அந்த நிலை மேலும் மோசமடையும். தற்போது இலங்கையின் விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை காரணமாகவும், இலங்கையின் ஏற்றுமதி துறைக்கு (பெருந்தோட்ட பயிர் உள்ளிட்ட) இந்த நிலை ஏற்படுத்தியுள்ள பாதகமான தாக்கம் காரணமாகவும் எதிர்காலத்தில் இலங்கையும் உணவு பற்றாக்குறைக்கும், பெரும் பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கனவே இலங்கை ரூபாயின் அமெரிக்க டொலருக்கான பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த சில மாதங்களில் உலக சந்தையில் மசகு எண்ணை விலை வீழ்ச்சியடைந்த நிலையில் மசகு எண்ணை கொள்வனவுக்காக செலவாகும் டொலர்களின் அளவு குறைவடைந்த மற்றும் இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்தும், உலக வங்கியிடமிருந்தும் உதவி கிடைத்துள்ள நிலையில் கூட இப்போது 1 அமெரிக்க டொலருக்காக 200 ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது.

மறுபுறமாக இலங்கையின் பிரதான ஆடை தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல தனியார் துறை நிறுவனங்கள் தற்காலிக பணியாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களை குறைப்பதற்கும், சில நிறுவனங்கள் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளன. அதன் காரணமாக நாட்டில் தொழிலின்மை பிரச்சினை ஏற்படுவதுடன், மக்களின் வருமானமும் இழக்கப்படும். விவசாயம் மற்றும் பெருந்தோட்ட துறையிலும் மக்களின் வருமானமும் இழக்கப்படும். விவசாயம் மற்றும் பெருந்தோட்ட துறையிலும் உற்பத்தி வீழ்ச்சியடைதல் மற்றும் வருமானம் குறைவடையும் நெருக்கடி உள்ளது.

இந்த பாரதூரமான பொருளாதார நெருக்கடி தொடர்பிலும், அதனை கட்டுப்படுத்துவதற்கும் இப்போதே மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் அரசாங்கம் இதுவரை போதுமானளவு கவனம் செலுத்தியதாக தெரியவில் லை. எனவே வரவுள்ள தேர்தலை மட்டும் சிந்திப்பதற்கு பதிலாக ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி தொடர்பிலும் அரசாங்கம் தனது கவனத்தை செலுத்த வேண்டும் என கருதுகிறோம்.

02. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொது தேர்தல் அறிவிக்கப்பட்ட வேளையிலேயே இலங்கை COVID 19 வைரஸை தோற்கடிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அரசியலமைப்புக்கு அமைய 2020 ஆகஸ்ட் வரை இயங்கக்கூடிய நிலை இருந்த நாடாளுமன்றம், உயிர்கொல்லி வைரஸ் இலங்கையிலும் பரவும் ஆபத்து இருந்த நிலையில் மார்ச் 02 ஆம் திகதி ஜனாதிபதியால் கலைக்கப்பட்டது. விரைவாக தேர்தலை நடத்துவது பற்றியே சிந்தித்தார்கள். தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அமையவே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. அது தொடர்பான நெருக்கடி தற்போது மீண்டும் ஏற்பட்டுள்ளது. அரசமைப்பு மற்றும் தேர்தல் சட்டத்துக்கு அமைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 3 மாதங்களுக்கு முன்னர் - அதாவது ஜூன் 02 திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதன்படி அதற்கு முன்னர், அதாவது மே மாத இறுதியில் தேர்தலை நடத்த வேண் டும். கொரோனா ஆபத்து தொடரும் நிலையில் தேர்தலை நடத்துவது ஆபத்தானதாகும். மே மாத இறுதியில் தேர்தலை நடத்த முடியாது என்பதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருத்தாகும்.

இந்த நிலை தொடர்பில் மே மாத இறுதியில் தேர்தலை நடத்துவது சிரமமானது என்பதனால், அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் கருத்தை கேட்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்த நிலையில், அதனை கருத்திலெடுக்காத, கடுமையான பதிலே ஜனாதிபதி தரப்பிலிருந்து கிடைத்துள்ளது. அரசாங்கம் மே மாத இறுதியில் எப்படியாவது தேர்தலை தேர்தலை நடத்த எண்ணுவது தெளிவாகிறது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது உண்மைதான். இருப்பினும், நோய் முழுமையாக கட்டுப்படுத்தப்படாத நிலையில் மே மாத இறுதியில் தேர்தலை நடத்தினால் மக்கள் ஒன்றுகூடும் வாய்ப்புகள் அதிகரிப்பதன் காரணமாக கட்டுப்படுத்தப்பட்ட வைரஸ் பரவல் மீண்டும் பரவும் நிலை ஏற்படலாம். அத்துடன், அதனை தடுப்பதற்காக மக்கள் ஒன்றுகூடுதல் வரையறுக்கப்பட்டால், அது நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தடையை ஏற்படுத்தும்.

தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருமமாகும் என ஜனாதிபதி செயலாளர் அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். அது உண்மையே. தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாக இருந்த போதிலும், நியாயமான மற்றும் சுதந்திரமான தேர்தலை நடத்தக்கூடிய சூழலை உருவாக்கி, உறுதிப்படுத்துதல் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் பொறுப்பாகும். மே மாத முதல் வாரம் இலங்கையில் கொரோனா பரவும் உச்சக்கட்டம் என அரச மருத்துவ அலுவலர் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். தற்போது கம்பஹா மாவட்டம் முழுமையாக மூடப்பட்டுள்ளது. நாளாந்தம் புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படுகிறார்கள். நிலமை அவ்வாறு இருக்கையில் மே மாதம் தேர்தலை நடத்த எண்ணுவது மக்கள் பாதுகாப்பை கருத்திலெடுக்காத, தமது அதிகாரத்தை மட்டுமே சிந்திக்கும் ஆட்சியாளர்களே ஆவர். அதன் காரணமாகவே இந்த பிரச்சினையை பாரதூரமாக கருத வேண்டியுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

> “நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது உண்மைதான். இருப்பினும், நோய் முழுமையாக கட்டுப் படுத்தப்படாத நிலையில் மே மாத இறுதியில் தேர்தலை நடத்தினால் மக்கள் ஒன்றுகூடும் வாய்ப்புகள் அதிகரிப்பதன் காரணமாக கட்டுப்படுத்தப்பட்ட வைரஸ் பரவல் மீண்டும் பரவும் நிலை ஏற்படலாம். அத்துடன், அதனை தடுப்பதற்காக மக்கள் ஒன்றுகூடுதல் வரையறுக்கப்பட்டால், அது நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தடையை ஏற்படுத்தும்.”

# கொரோனாவை தோற்கடிக்கும் ....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவு அரச ஊடகங்கள் உள்ளிட்ட இலத்தினியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளும் ஆற்றல் அரசாங்கத்துக்கு இருந்தாலும், எதிர்க்கட்சிகளுக்கு இருக்காது. எனவே நோய் முழுமையாக கட்டுப்படுத்தப்படாத நிலையில், தேர்தல் பிரச்சாரத்துக்காக எதிர்க்கட்சிகளுக்கு நியாயமான காலம் வழங்கப்படாமல், சந்தேகம் பயமின்றி வாக்கு சாவடிக்கு வாக்காளர் செல்லக்கூடிய நம்பிக்கையான சூழல் உருவாகாத நிலையில் தேர்தலை நடத்தினால் அது நியாயமான தேர்தலாக இருக்காது. ஆகவே எந்த திகதியில் தேர்தல் நடத்தப்பட்டாலும், அது அனைவரும் கருத்து தெரிவிக்கக்கூடிய நியாயமான மற்றும் சுதந்திரமான தேர்தலை நடத்தக்கூடிய சூழலில் தேர்தல் நடத்தப்பட்ட வேண்டும். அவ்வாறான சூழலை உருவாக்கி, தேர்தலை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என தெரிவிக்கிறோம்.

03. விசேட நிலை என்பதனால் COVID 19 வைரஸ் பரவலை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் போது சில சட்டதிட்டங்கள் வரையறுக்கப்பட்டு, துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனை நாம் அனைவரும் புரிந்து கொள்ளலாம். இருப்பினும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் முழு சமூகத்தையும், அனைத்து மக்களையும் இணைத்து கொள்வதற்கு பதிலாக ஜனாதிபதி தனக்கு கீழ்ப்படியும் நபர்களை மட்டும் சேர்க்க நடவடிக்கை எடுப்பதும், அந்த வேளையில் நாடாளுமன்றம் செயலிழந்து இருப்பதும், சில குறிப்பிடத்தக்க சட்டங்கள் வேண்டுமென்றே உதாசீனப்படுத்துதலும் காரணமாக ஜனநாயக கட்டமைப்புக்குள் செயற்படுவதற்கு பதிலாக தனிநபர் ஆட்சி தொடர்பான ஆசையைக் காட்டுகிறது. அனைத்து ஊடகங்களையும் பாவித்து பொது மக்களிடம் இந்த செயற்பாட்டை அங்கீகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பது பாரதூரமானதாகும்.

ஜனநாயகத்துக்கு சவால் விடுத்து, ஒரு தனிநபரை சூழவுள்ள குழுவின் ஆட்சியை நியாயப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஜனநாயத்துக்கு அச்சுறுத்தலாகும் என்பதுடன், எதிர்கால சர்வாதிகார ஆட்சிக்கான ஒத்திகையாகவும் அமையலாம். அத்துடன் முழு நாடும் இன, மத பேதமின்றி ஒன்றிணைந்து இந்த கொரோனா வைரஸை தோற்கடிக்க வேண்டியுள்ள வேளையில் அரசாங்கத்தின் பல்வேறு குழுக்கள் மற்றும் சில ஊடகங்கள் இந்த அனர்த்த வேளையில் கூட இனவாதத்தை தூண்டுவதனை காணலாம். குறிப்பாக நோயாளிகள் அடையாளம் காணப்படும் போது முஸ்லிம் நோயாளிகள் தனியாக பெயர் குறிப்பிடப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிரான கருத்தை சமூகத்தில் உருவாக்க முயற்சிப்பது கவலைக்குரியதாகும். சமூக ஊடகங்களில் அரசாங்கத்தை விமர்சித்து கருத்து வெளியிடுவோருக்கு எதிராக சட்டதை அமுல்படுத்துவதில் அரசாங்கம் காட்டும் அக்கறையும், அவசரமும் இவ்வாறான இனவாத கருத்துக்களை பரப்புவதனை தடுப்பதில் இருக்கவில்லை. தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பரப்பப்படும் இவ்வாறான போலி பிரச்சாரங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்திருந்தும், அது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் காரணமாகவே இனவாத, மதவாதத்தை முன்னிநிலைப்படுத்திய சர்வாதிகார ஆட்சிக்கு வழிசமைக்கும் என நாம் கூறுகிறோம்.

எனவே, COVID 19 வைரஸை தோற்கடிக்க அனைவரும் இணைந்து போராடுவதுடன், ஏற்படக்கூடிய ஜனநாயக விரோதப் போக்கின் ஆபத்தை அடையாளம் காண்பதும், ஆரம்பத்திலேயே அதனை தோற்கடிப்பதற்காக போராடுவதும் ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரதும் பொறுப்பாகும் என தெரிவிப்பதுடன், தேசிய மக்கள் சக்தி ஜனநாயகத்தை பாதுாகப்பதற்காக ஆற்றக்கூடிய அனைத்து அர்ப்பணிப்புகளையும் செய்வதற்கு தயாராக இருக்கிறோம் என தெரிவிக்கிறோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் ஊரடங்கு தளர்வு குறித்து இப்போது சரியாக கூறமுடியாது

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்ப்பாணத்தில் இன்று உள்ள நிலையில் கொரோனொ வைரஸ் நோயின் எதிர்காலம் மற்றும் ஊரடங்கு தளர்த்துவது பற்றி சரியாகக் கூறிவிட முடியாது என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான நிலைமைகள் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் உயர் அதிகாரிகள் மற்றும் விசேட செயலணிகள் தான் முடிவெடுக்கின்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இங்குள்ள நிலைமைகளை நாங்கள் அவர்களுக்கு கூறுகிறோம்.

அதன் பின்னர் அவர்கள் அது தொடர்பில் முடிவெடுப்பார்கள். குறிப்பாக ஊரடங்கு மற்றும் தனிமைப்படுத்தல் போன்ற முடிவுகளை அரசின் உயர் மட்டத்தில் எடுக்கின்றனர்.

ஊரடங்கு பற்றி அல்லது நோயின் எதிர்காலம் பற்றி சரியாகக்ல் கூறிவிட முடியாது. பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஏனெனில் உலகளாவிய ரீதியில் இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது - என்றார். (ஜ - 7)

# தாராபுரத்துக்கு வந்து சென்றவரின் மகனுக்கும் தொற்று

புத்தளம் அல் காசிம் நகரில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவரின் மகனும் கொரோனா தொற்றிற்கு இலக்கானமை உறுதியாகியுள்ளது.

தற்போது புனாணை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 38 வயதான நபரிற்கு கொரோனா தொற்று உள்ளதுநேற்றுஉறுதியானது.இதையடுத்து, அவரது நண்பர்களை தனிமைப்படுத்தல் மையத்திற்கு அனுப்ப விசேட நடவடிக்கை இன்று புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தோனேசியா சென்று வந்திருந்த அல் காசிம் நகரை சேர்ந்த 62 வயதான ஒருவர் கொரோனா தொற்றிற்கு இலக்காகியிருந்தார். இவர் மன்னார் தாராபுரத்திற்கு மரணச்சடங்கிற்கு வந்து சென்றதால் தாராபுரம் முடக்கப்பட்டது. அவருடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்தல் மையத்திற்கு அனுப்பப்பட்டனர்.

தனிமைப்படுத்தலிற்கு அனுப்பப்பட்ட அவரது மகனும் தொற்றிற்கு இலக்கானது நேற்று உறுதியானது.

# ரூபாவின் பெறுமதி சற்று உயர்ந்தது




*அமெரிக்க டொலருக்கான நிகரான இலங்கை ரூபாவின் பெறு மதி அதிகரித்துள்ளது.*

*அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் இன்றைய விற்பனை பெறுமதி 195.78 ரூபாவாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

*கடந்த சில தினங்களாக தொடர்ந்து இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது*

# கொரோனோ பரிசோதனையை வடக்கில் அதிகரிக்கப் பணிப்பு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஏப். 15

கொரோனோ தொற்று பரிசோதனையை வட பகுதியில் அதிகரிக்குமா்று சுகாதார அமைச்சு பணிப்புரை வழங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ள யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, விரைவில் அந்தப் பரிசோதனைகள் அதிகரிக்கப்படுமென்று கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ். பல்கலைக்கழக மருத்தவ பீடத்தில் தற்போது ஆய்வுகூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பரிசோதனைகள் இன்னும் சில வாரத்தில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

குறிப்பாக மருத்துவ பீடத்தில் ஒரு நாளைக்கு 72 பேருக்கு அய்வுகூடப் பரிசோதனை செய்ய முடியும். அதே போல யாழ்.போதனா வைத்தியசாலையிலும் 72 ஹிருக்குச் செய்யக்கூடியதாக இருக்கும். அவ்வாறாக ஒரு நாளைக்கு 144 பேருக்கு இந்தப் பரிசோதனைகளை இங்கு செய்ய முடியும்.

அந்தப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான 'கிற்'களை சுகாதார அமைச்சு எமக்கு வழங்கி வருகின்றது. எங்களுக்குத் தேவையான கிற்களை நாங்கள் அமைச்சிடம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறொம். ஆகையினால் யாழ். பல்கலைக்கழகம் போன்று விரைவில் யாழ் போதனா வைத்தியசாலையிலும் பரிசோதனையை ஆரம்பிப்போம் - என்றார்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park 077 757 0124 021 567 5566
NPcpark 077 336 6443 021 222 9581
northernpcpark 075 555 7327 021 222 2050
Northern PC Park 071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு
சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின்
கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# கொரோனா குடும்பத்திலிருந்து புதிதாக 6 ரகமான வைரஸ்கள்

## மியன்மார் வௌவால்களில் கண்டுபிடிப்பாம்



கொவிட் 19 எனும் உயிர்க்கொல்லி வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த மேலும் ஆறு வகையான வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மியன்மார் நாட்டைச் சேர்ந்த வௌவால்களில் இந்தப் புதிய வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன என்றும் இவை, மியன்மாரிலுள்ள 3 வகையான வௌவால்களிடமிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இந்தப் புதிய வைரஸ்கள், கொவிட் 19 உள்ளடங்கிய SARS - CoV - 2 குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும் இவை, உலகம் முழுவதும் தற்போது பரவி வருகின்ற கொரோனா வைரஸுடன், மரபணு ரீதியில் தொடர்புபடாதவை என்றும், விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வைரஸ்கள், விலங்குகள் ஊடாக மனிதர்களுக்கும் பரவக்கூடிய வாய்ப்புள்ளதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மரக்கறி, பழம் கொள்வனவில் ஜனாதிபதி செயலணி தீவிரம்

அத்தியாவசியச் சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணியின் தலைமீட்டில், மரக்கறிகள் மற்றும் பழங்களைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்டம், நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களை மையப்படுத்தி, இன்றைய தினம் அவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



சித்திரைப் புத்தாண்டுக் காலத்தையொட்டி ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் முதலாம் கட்டம், இம்மாதம் 11, 12ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையில், இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளையும் அநுராதபுரம் மற்றும் மஹாவிலச்சிய விவசாயிகளிடமிருந்து பூசணிக்காய்களையும் கொள்வனவு செய்ய, மேற்படி செயலணி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, நேற்றுமுன்தினம் காலை நொச்சியாகம மற்றும் மஹாவிலச்சி ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ள செயலணியினர், பூசணிக்காய்களைக் கொள்வனவு செய்துள்ளனர்.

அந்த வகையில், மஹாவிலச்சிய பிரதேசத்தில் செய்கைபண்ணப்பட்டிருந்த 265,000 கிலோகிராம் பூசணிக்காய் விளைச்சலில் 149,000 கிலோகிராம் விளைச்சலை, கிலோவுக்கு 40 ரூபாய்ப்படி செயலணி கொள்வனவு செய்துள்ளது.

தவிர, பதுளை, பண்டாரவளை, வெலிமடை, கெப்பட்டிபொல ஆகிய பிரதேசங்களிலிருந்தும் மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய, செயலணி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி, வேலனை
021 221 5472
070 301 3012

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

## அதிக விலைக்கு பொருள்கள் விற்பனை செய்த

# 11 வர்த்தகர்களுக்கு எதிராக வடக்கில் சட்ட நடவடிக்கை









யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் நேற்றுப் புதன்கிழமை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளில் அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்டவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண பதில் உதவிப் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பதிகாரியுமான ஏ.எல். ஜகுபர் சாதிக் தெரிவித்தார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் விவரிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

யாழ்ப்பாணம், மல்லாகம் சுன்னாகம், ஆவரங்கால், பருத்தித்துறை உள்ளிட்ட இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு இன்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இரண்டு குழுக்கள் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

இதன்போது நாட்டு அரிசியை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்கள் 7 பேருக்கும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 150 ரூபாய் என்ற கட்டுப்பாட்டு விலையைமீறி அதிகவிலைக்குவிற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராகவும் பொருள்களில் பொறிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசின் கட்டுப்பாட்டு விலைகளை மீறி பாவனையாளர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வோர் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண பதில் உதவிப் பணிப்பாளரும் ஏ.எல். ஜகுபர் சாதிக் மேலும் தெரிவித்தார்.

- இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.








படம் 1



படம் 2

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

| படம் 1 | படம் 2 |
|---|---|
| டேவிராஜ் பிலெஷின் – தரம் 6 | அக்ஷா கீர்த்திராஜ்– தரம் 4 |
| யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை | ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி |

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு– 'குருவிக் கூடு'

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'கடற்கரை' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. தனுசன் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்ப்பப் பாடசாலை

தவேந்திரன் ஆஹர்ஷன் - தரம் 2
யா/ நெல்லியடி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை

எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எவ். லீனா
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, - கல்கமுவ

எம். என். எவ். நிஹ்லா - தரம் 8
பு/ மதவாக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம்

ரமேஷ் ரமியன் - தரம் 5
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

சுபானந்தன் அஷ்வின் - தரம் 2
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

எஸ். எவ். இஸ்ரத் - தரம் 11
பு/ அல் கிலால் மத்திய கல்லூரி

தனுஷ்கான் தற்பரன் - தரம் 6
சென் தோமஸ் கல்லூரி, கொழும்பு

தரண்யா தற்பரன் - தரம் 9
கொழும்பு பிப்ஸ் கல்லூரி

எம். எஸ். முகம்மட் கைஸ் - தரம் 1
கமு/ சது மகளிர் வித்தியாலயம் - சம்மாந்துறை

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

எம். எஸ். முகம்மட் பாரிக் - தரம் 3
கமு/ சது மகளிர் வித்தியாலயம் - சம்மாந்துறை

ஏ. ஆர். முஹம்மட் றிஸ்னி - தரம் 4
கமு/ சது அல் மனார் வித்தியாலயம் - சம்மாந்துறை

பிரபாகர் அபிஜித் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

எச். இனித்திகா - தரம் 8
வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்

கெசெந்த் கீர்த்தைராஜ்
ஹற்றன் ரெகொபோத் ஆரம்பப் பாடசாலை

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

த. ஆரூசன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

இ. சிந்தூரிகா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

எஸ். ஹரிணி - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

பாசனா ஹர்ன் - தரம் 7
யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

ஜெயசாந்தன் வித்யாசாகர் - தரம் 2
யாழ். பரியோவான் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஹிமா இஸ்ஸத் - தரம்5
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எஸ். அக்சன்யா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பதநேந்திரன் அபிராம் - தரம் 4
யா/ பரியோவான் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

எஸ். எவ். சம்ஹா - தரம் 5
பு/ எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம்

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

குருவிக் கூடு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (16/04/2020) தலைப்பு
குருவிக் கூடு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# என் அரசியல் மீதான காழ்ப்புணர்ச்சியே என் சகோதரரின் கைதுக்குக் காரணம்!

## இந்த அரசியல் பழிவாங்கல் போக்குக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்றார் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்

(அஸீம் கிலாப்தீன்)

*“எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனை செவ்வாய் மாலை அவர் வீட்டிலிருந்தபோது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அங்கு சென்று, அவரைக் கைது செய்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் சம்பந்தம் இருப்பதாகக் கூறியே அவரைக் கைது செய்தனர் என ஊடகங்கள் வாயிலாக அதனைத் தெரியப்படுத்தினர். எனது சகோதரரர் அநீதியாகக் கைது செய்யப்பட்டமைக்கு எதிராகவும், பழி வாங்கலுக்கு எதிராகவும் நிச்சயமாக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகின்றோம்’ - என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.*

தமது சகோதரரின் கைது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

நானோ, எனது குடும்பத்தினரோ அல்லது சகோதரர் ரியாஜ் பதியுதீனோ, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதச் சம்பவத்துடன் எந்தவொரு தொடர்பும் இல்லாதவர்கள் என்பதை, மிகவும் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே பயங்கரவாதம் உருவாகுவதற்கு ஒருபோதும் நாங்கள் உதவமாட்டோம். அனுமதிக்கவும்மாட்டோம். அதற்கெதிராக அனைத்துக் கட்டங்களிலும் செயற்பட்டிருக்கின்றோம். செயற்பட்டு வருகின்றோம். ஆனால், இந்தப் பயங்கரவாதச் சம்பவத்துடன் எனது சகோதரரை தொடர்புபடுத்தி, இவ்வாறானதொரு அநியாயச் செயலை செய்திருக்கின்றமைக்கு எனது அரசியல் மீது கொண்டிருக்கின்ற காழ்ப்புணர்ச்சியே காரணமாகும். அதனால்தான் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் நம்புகின்றேன்.

பாதுகாப்புத் தரப்பினர் நடத்துகின்ற விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பை



வழங்குவது எமது கடமை என்ற வகையில், சகோதரர் ரியாஜ் பதியுதீனும் பூரண ஒத்துழைப்பை இந்த விசாரணைக்கு வழங்குவார். ஆனால், அவரது விசாரணை தொடங்கி, அது நிறைவடைவதற்கு முன்னரே, மறுகணத்திலிருந்தே இந்தச் சம்பவத்துடன் அவர் தொடர்புடையவர் என்ற பொய்யான செய்தியை நாடு முழுவதும் இனவாத ஊடகங்கள் பரப்பி வருகின்றன.

உயிர்த்த ஞாயிறு சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினத்தில், அடுத்த நிமிடத்திலிருந்தே ரிஷாத் பதியுதீன் இந்தச் செயலுடன் தொடர்புற்றிருக்கிறார் என அபாண்டங்களைப் பரப்பினர்.

எமது அரசியல் கருத்துக்கு மாறாக இருந்தவர்கள், கடந்த காலங்களில் அவர்களது அரசியல் நடவடிக்கைகளுக்கு நாங்கள் உதவி செய்யவில்லை என்ற காரணத்தினால், ஒருசில அரசியல்வாதிகள் தொடர்ந்தேர்ச்சியாக இந்த சம்பவத்துடன் என்னை தொடர்புபடுத்தி மோசமாகப் பேசினர். பிழையான பிரச்சாரங்களை அரசியல் ரீதியாக முன்னெடுத்தனர். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில், பொலிஸ்மா அதிபர் மூன்று விசாரணைக் குழுக்களை அப்போது அமைத்ததுடன், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூலம், ரிஷாத் பதியுதீனுக்கு இதில் சம்பந்தம் இருந்தாலோ அல்லது இந்தச் சம்பவத்துடன் அவர் தொடர்பான தகவல்கள் இருந்தாலோ பொலிஸில் வந்து முறையிடுமாறு, நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் செய்தி பரப்பினார்கள். அதற்கான கால அவகாசமும் கொடுத்தார்கள். நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

என் மீதான இந்த விசாரணைக்கென மூன்று விடே பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்த முறைப்பாடுகள் தொடர்பில், வழங்கப்பட்ட அத்தனை தகவல்களும் ஆவணங்களும் பொலிஸ் குழுக்களால் பரிசீலிக்கப்பட்டன. இந்த விசாரணைகளின் முடிவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிலோ, வேறு எந்த பயங்கரவாதத்துடனோ ரிஷாத் பதியுதீனுக்கு எதுவித தொடர்புமில்லை என நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அறிவித்தனர். தற்போதிருக்கும் பதில் பொலிஸ்மா அதிபரே, இந்த விசாரணை அறிக்கையை எழுத்து மூலம் அப்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வழங்கினார். இந்த விடயங்கள் அனைத்தும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கையில் இடம்பெற்றிருக்கின்றன.

அத்துடன், எனது சகோதரரோ, எனது குடும்பத்தினரோ இந்த பயங்கரவாதச் சம்பவத்துடன் எந்தத் தொடர்பும் கொண்டிருக்கமாட்டார்கள் என, நான் உறுதியுடன் மீண்டும் கூற விரும்புகிறேன் – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கடும் மழை, மின்னல் குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுப்பு

கடும் மழை மற்றும் சக்திவாய்ந்த மின்னல் தாக்கங்கள் குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், நேற்று பிற்பகல் 1.30 மணியுடன் ஆரம்பித்த 24 மணிநேரத்தில், நாட்டின் பல பகுதிகள், மேற்கண்ட வானிலைப் பிரச்சினையை எதிர்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம், சப்ரகமுவா, மத்தி வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் இடைக்கிடையான பிரதேசங்களில், மாலைவேளைகளிலும் இரவுநேரங்களிலும், கடும் இடியுடன் கூடிய மழை பெய்யுமென்றும் இதன் போது, சக்திவாய்ந்த மின்னல் தாக்கங்கள் ஏற்படுமென்றும், திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. இவ்வாறான நேரங்களில், வீடுகளுக்கு வெளி யேயோ, மரங்களுக்குக் கீழேயோ இருக்க வேண்டாமெனத் தெரிவித்துள்ள திணைக்களம், வயல்கள், தேயி லைத் தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள், நீர்த் தேக்கங்களுக்கு அருகிலும் நிற்பதைத் தவிர்க்குமாறும் தெரிவித்துள்ளது.

அத்துடன், வயர்கள் பொருத்தப்பட்ட தொலைபேசிகள், மின்சாரத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட மின் உபகரணங்களைப் பாவிப்பதைத் தவிர்க்குமாறும் கூறியுள்ள திணைக்களம், சைக்கிள், டிரெக்டர், படகுகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் வலியுறுத்தியுள்ளது.

மேலும், கடும் காற்று வீசக்கூடிய வானிலை நிலவுவதால், மரங்கள், மின் கம்பங்கள் போன்றன முறிந்து விழக்கூடுமென்றும் இதனால் இது விடயத்தில் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2020 இல் வெளியிடப்பெற்றது.